**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.150/2020 |
| Deposition of witness for Prosecution | : | P.W–6 |
| Name | : | விக்னேஷ், வயது 30 |
| Father Name/Husband Name | : | ரவி |
| Village | : | தெற்கு ஆரைக்குளம் |
| Taluk | : | ஓட்டபிடாரம் |
| Calling | : | ஓட்டலில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of August 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது தெற்கு ஆரைக்குளத்தில் வசித்து ஓட்டலில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுயைடது தான். அந்த கையொப்பத்தை கடந்த 14.08.2019 ஆம் தேதி மாலை 04.15 மணியளவில் செண்பகபேரி விலக்கு அருகே வைத்து விபத்து சம்பந்தமாக நாலாட்டின்புதூர் காவல்நிலைய போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. வழக்கில் இறந்த பால்ராஜ் உங்களுக்கு சித்தப்பா முறை என்றால் பெரியப்பா முறை. அவர் உடல் மீது பிரேத பரிசோதனை மறுநாள் காலையில் தான் செய்தார்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனையின் போது நீங்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் சரிதான்.
2. ஆய்வாளர் உங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டதன் பேரில் தான் மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றால் ஆம். அ.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நீங்கள் மருத்துவமனையில் வைத்து செய்தீர்கள் என்றால் சரியல்ல செண்பகபேரி விலக்கு அருகே வைத்து படம் வரைந்ததற்காக வாங்கிய கையொப்பம்.

3. நீங்கள் செண்பகபேரி வாகனத்திற்கு நீங்கள் போனதில்லை என்றால் விபத்து சமயம் போனேன். அதற்கு முன்னர் போனத்தில்லை. அந்த ஊர் ரோட்டிற்கு கிழக்கில் உள்ளதா மேற்கில் உள்ளதா என்பது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த இடத்தில் பேருந்து நிறுத்தங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.
4. போலிசார் உங்களை விசாரித்த போது என்ன காரணத்திற்காக அங்கு நின்றீர்கள் என்று நீங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல விபத்து நடந்ததால் நின்றதாக சொன்னேன். சம்பவ இடத்திற்கு போன போது ரோட்டின் கிழக்கு பக்கம் தான் இரத்தக்கறை படிந்திருந்தது என்றால் ரோட்டிற்கு ரைட் சைடில் காணப்பட்டது.
5. எங்கிருந்து ரைட் சைடு என்றால் கோவில்பட்டியில் இருந்து போகும் சாலையின் ரைட் சைடு. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வதும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.
6. வழக்கில் இறந்த நபர்உங்கள் பெரியப்பா என்பதால் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.4 ல் உள்ள கையொப்பத்தை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நீங்கள் மட்டும் தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் இல்லை நானும் செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.